யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

# தவணைப் பரீட்சை, யூன்- 2015
# Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | பொதுச் சாதாரணப் பரீட்சை | இரண்டு மணி முப்பது நிமிடம் |
|---|---|---|

கவனிக்க.

❖ 1 - 60 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, விடைத்தாளில் அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமையப் புள்ளடி (✕) இடுக.

01) 2015 ஆம் ஆண்டில் இருந்து ஐ. நா. பாதுகாப்புச் சபையில் தற்காலிக உறுப்பினராக இணைந்துள்ள நாடு பின்வருவனவற்றில் யாது?
(1) மலேசியா (2) அங்கோலா (3) நியூசிலாந்து
(4) வெனிசுலா (5) ஸ்பெயின்

02) பெயர்பெற்ற இலங்கைக் கிறிக்கற்று விளையாட்டு வீரர் மஹேல ஜயவர்த்தன பற்றிய **பிழையான** கூற்று யாது?
(1) அவர் இந்தியாவுக்கு எதிராக விளையாடியதன் மூலம் ரெஸ்ட் கிறிக்கற்று விளையாட்டில் பிரவேசித்தார்.
(2) அவர் கிறிக்கற்றுப் போட்டிகளில் பெற்ற மொத்த ஓட்டங்களின் எண்ணிக்கை 12000 இலும் அதிகமாகும்.
(3) அவர் இலங்கை சார்பாக அதிக ரெஸ்ட் போட்டிகளில் விளையாடிய வீரர் ஆவார்.
(4) அவர் இருபதுக்கு இருபது (20 - 20) போட்டிகளில் 10000 ஓட்டங்களைக் கடந்தவர் ஆவார்.
(5) அவர் 149 ரெஸ்ட் போட்டிகளில் விளையாடினார்.

03) 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆபிரிக்காவின் ஒரு நாட்டில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கொல்லப்பட்டனர். அது பின்வரும் எந்நாட்டிலாகும்?
(1) கென்யா (2) சிரியா (3) யேமன்
(4) லிபியா (5) சூடான்

04) 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் ஒரு நாட்டில் முதல் பெண் சனாதிபதியாக கிராபர் கிட்டாரோவிக் தெரிவு செய்யப்பட்டார். அந்நாடு யாது?
(1) இஸ்ரேல் (2) குரோஷியா (3) சிலி
(4) அவுஸ்திரேலியா (5) நியூசிலாந்து

05) 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியப் பிரதமர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். இதன்போது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளில் ஒன்று ரவீந்திரநாத் தாகூர் நூதனசாலையை அமைத்தலாகும். இது அமைக்கப்படவிருக்கும் பல்கலைக்கழகம் யாது?
(1) களனிப் பல்கலைக்கழகம்
(2) ஊவா வெல்லஸப் பல்கலைக்கழகம்
(3) ராஜரட்டைப் பல்கலைக்கழகம்
(4) றுகுணுப் பல்கலைக்கழகம்
(5) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

06) 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணக் கிறிக்கற்றுப் போட்டித் தொடரில் அரை இறுதிச் சுற்றுவரைக்கும் வந்த நாடுகள் யாவை?
(1) தென்னாபிரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
(2) இந்தியா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ்
(3) நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள்
(4) இந்தியா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான்
(5) அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்தியா, இங்கிலாந்து

07) லீ குவான் யூ பற்றிப் பின்வருவனவற்றில் எது **பொய்யானது**?
(1) அவர் சிங்கப்பூரின் முதற் பிரதமராவார்.
(2) அவர் ஒரு வழக்கறிஞர் ஆவார்.
(3) அவர் சிங்கப்பூரின் தந்தை எனப் போற்றப்படுபவர்.
(4) அவர் மூன்று தசாப்பதங்களாக சிங்கப்பூரின் பிரதமராக இருந்தவர்.
(5) அவர் சமாதானத்திற்கான நோபல் பரிசைப் பெற்றார்.

08) 2015 இல் றோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் பாப்பாண்டவர் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். இதன் பொருட்டு விசேட முத்திரையும், நாணயமும் வெளியீடு செய்யப்பட்டது. அந்நாணயத்தின் பெறுமதி யாது?
(1) ரூபா 500 (2) ரூபா 1000 (3) ரூபா 1500
(4) ரூபா 5000 (5) ரூபா 10000

09) அண்மையில் இலங்கை அறிஞர் ஒருவரின் நினைவாக தபால் முத்திரை ஒன்றை இந்திய அரசு வெளியிட்டுக் கௌரவித்தது. அவர்
(1) அநாகரிக தர்மபாலா (2) டீ. எஸ். சேனாநாயக்கா
(3) பொன்னம்பலம் இராமநாதன் (4) டீ. பி. ஜயத்திலக
(5) எதிரிவீர சரச்சந்திரா

10) அண்மையில் தனி நாடாகப் பிரிந்து செல்வது பற்றிய ஒரு வாக்கெடுப்பு நடைபெற்றமை சர்வதேச கவனத்திற்குட்பட்டது. அது எந்நாடு?
(1) ஸ்கொட்லாந்து (2) இங்கிலாந்து (3) வேல்ஸ்
(4) வட அயர்லாந்து (5) நியூசிலாந்து

11) 2015 ஆம் ஆண்டில் இலங்கையின் அரசியலமைப்புக்குச் செய்யப்பட்ட 19 ஆம் திருத்தம் தொடர்பாகப் பின்வரும் எக்கூற்று **பொய்யானது**?
(1) அது அரசியலமைப்புடன் இணங்குகின்றதாவென உயர் நீதிமன்றத்தினால் பரிசீலிக்கப்பட்டது.
(2) அதன் மூலம் சனாதிபதிப் பதவியை வகித்தல் தொடர்பான இரு தவணை எல்லை நீக்கப்பட்டது.
(3) அது சனாதிபதியின் அதிகாரத்தை மட்டுப்படுத்தியது.
(4) சனாதிபதி பதவியில் வெற்றிடம் ஏற்பட்டால் சபாநாயகர் புதிய சனாதிபதி பதவி வகிக்கின்ற காலம் வரைக்கும் பதிற் கடமையாற்றுதல் வேண்டும்.
(5) சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்தல் என்பது இத்திருத்தத்தின் ஒரு குறிக்கோள் ஆகும்.

12) அண்மையில் உலகப் புகழ் இசைக்கலைஞர் கெஜினி இலங்கை வந்திருந்தார். அவர் பின்வரும் எந்த இசைக் கருவியை வாசிப்பதில் பிரசித்தி பெற்றார்?
(1) வயலின் (2) பியானோ (3) சிதார்
(4) எஸ்ராஜ் (5) சக்ஸபோன்

13) 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஷெரிங் தும்பே இலங்கைக்கு வருகை தந்திருந்தார். அவர்
(1) மாலைதீவு சனாதிபதி ஆவார் (2) சீன சனாதிபதி ஆவார்
(3) இஸ்ரேல் பிரதமர் ஆவார் (4) நேபாள பிரதமர் ஆவார்
(5) பூட்டான் பிரதமர் ஆவார்

14) பின்வருவன எபோலா (Ebola) தொற்றல்கள் பற்றிய ஐந்து கூற்றுகளாகும்.

A - **நோயாளியின் நீர்மங்களுடன் தொடர்பு கொண்டவருக்கு அதன் மூலமாக அத்தொற்றல் பரவும்.**

B - **இது காற்றின் மூலமாக பரவும்.**

C - **இந்த வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களை தனிமைப்படுத்துவதன் மூலம் வைரஸ் பரவுதலை முற்றாகக் கட்டுப்படுத்த முடியும்.**

D - **தொடுதல் மூலம் இந்நோய் பரவக் கூடும்.**

E - **ஒருவருக்கு அண்மையில் நோயாளி தும்மினால் அவருக்கு தொற்று ஏற்படலாம்.**

மேற்கூறிய கூற்றுகளில் சரியானவையென ஏற்றுக்கொள்ளத்தக்க கூற்றுகள் யாவை?

(1) A, B, C, E ஆகியன மாத்திரம்
(2) B, C, D, E ஆகியன மாத்திரம்
(3) A, C, D, E ஆகியன மாத்திரம்
(4) A, B, C, D ஆகியன மாத்திரம்
(5) A, B, D, E ஆகியன மாத்திரம்


15) சார்க் (SAARC) அமைப்பின் அடுத்த மாநாடு 2016 ஆம் ஆண்டு எங்கு நடைபெறும்?

(1) நேபாளம் (2) பங்களாதேஷ் (3) பூட்டான்
(4) பாகிஸ்தான் (5) இலங்கை

16) அமராவின் வீட்டிலிருந்து புகையிரத நிலையத்திற்கு உள்ள தூரம் $\frac{3}{4}\ km$ ஆகும். அமராவால் $4\ kmh^{-1}$ வேகத்தில் நடக்க முடியும். புகையிரத நிலையத்திற்கு ஓடிச்சென்ற ஒரு நாள் அமராவால் $3\frac{3}{4}$ நிமிடத்தை சேமிக்க முடிந்தது. அமரா ஓடிச்சென்ற வேகம் யாது?


(1) $4\ kmh^{-1}$ (2) $6\ kmh^{-1}$ (3) $8\ kmh^{-1}$
(4) $10\ kmh^{-1}$ (5) $12\ kmh^{-1}$

17) உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை இடம்பெறும் வீச்சு யாது?



(1) 10 - 14
(2) 15 - 19
(3) 20 - 24
(4) 25 - 29
(5) 30 - 34

18) ஒரு பக்க நீளம் 2 $cm$ உடைய சமனான 6 சதுரமுகிகள் உருவிலுள்ளவாறு ஒரு கிடையான மேசையின் மீது ஒட்டப்பட்டுள்ளன. வெளியே தெரியும் மேற்பரப்புகளில் நிறப்பூச்சு பூசப்படுகிறது. நிறம் பூசப்பட்ட மொத்தப் பரப்பளவு ($cm^2$ இல்) யாது?



(1) 24
(2) 48
(3) 60
(4) 72
(5) 84

➢ ***19, 20 ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.***


**ஒரு தந்தையினதும் மகனினதும் வயதுகளுக்கிடையிலான விகிதம் 3 : 1 ஆகும். 16 வருடங்களுக்கு முன்னர் அவர்களது வயதுகளுக்கிடையிலான விகிதம் 11 : 1 ஆக இருந்தது.**

19) தந்தையின் வயது யாது?
(1) 45 (2) 50 (3) 55
(4) 60 (5) 65

20) மகனின் வயது யாது?
(1) 16 (2) 18 (3) 20
(4) 22 (5) 24

21) இன்று புதன்கிழமை. இன்றிலிருந்து 500 ஆவது நாள் என்ன நாளாகும்?
(1) சனிக்கிழமை (2) ஞாயிற்றுக்கிழமை (3) செவ்வாய்க்கிழமை
(4) புதன்கிழமை (5) வெள்ளிக்கிழமை


22) A B C D ஒரு சதுரம்.
AED ஒரு சமபக்க முக்கோணி.
AB = 2 எனின், நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?




(1) $\sqrt{2}$ (2) 2 (3) 3
(4) $4-\sqrt{3}$ (5) $4-2\sqrt{3}$

23) 300 லீற்றர் நீரை நிரப்பக் கூடிய ஒரு தாங்கியினுள்ளே குறித்த ஒரு குழாயினால் நிமிடமொன்றுக்கு 12 லீற்றர் வீதம் நீர் நிரப்பப்படுகின்ற அதே வேளை இன்னொரு குழாயினால் நிமிடமொன்றுக்கு 15 லீற்றர் வீதம் நீர் வெளியேற்றப்படுகின்றது. தாங்கியில் நீர் முற்றாக நிரம்பியிருக்கும் போது இவ்விரண்டு குழாய்களையும் மு. ப. 10.00 இற்கு திறந்தால் தாங்கி முதற் தடவையாக வெறுமையாகும் நேரம் யாது?
(1) மு.ப. 10.20 (2) மு.ப. 10.40 (3) மு.ப. 11.10
(4) மு.ப. 11.20 (5) மு.ப. 11.40

24) ஒத்த மூன்று கோளங்கள் உருவில் காட்டியவாறு உருளை ஒன்றினுள் மட்டுமட்டாக உருளையின் உச்சியையும், அடியையும் தொட்டுக் கொண்டிருக்கின்றன. கோளங்களின் கனவளவுக்கும் உருளையின் கனவளவுக்குமிடையேயான விகிதம் யாது?



(1) 1 : 1
(2) 1 : 2
(3) 2 : 3
(4) 3 : 2
(5) 2 : 9

25) அடுத்து வரும் ஐந்து இரட்டை முழு எண்களின் கூட்டுத்தொகை 740 எனின், அவற்றுள் மிகப்பெரிய முழு எண் யாது?
(1) 20 (2) 40 (3) 150
(4) 260 (5) 370

26) 10 எண்களின் சராசரி −10 ஆகும். அவற்றில் 6 இன் கூட்டுத்தொகை 100 எனின், மற்றைய 4 இனது சராசரி யாது?
(1) −100 (2) −50 (3) 0
(4) 50 (5) 100

➢ **27 தொடக்கம் 29 வரையுள்ள வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.**

**ஆறு கார்கள் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டுள்ளன.**

- ✶ கறுப்புக் கார் ஒரு முடிவில் நிற்கிறது.
- ✶ நீலக் கார் கறுப்புக் காருக்குப் பக்கத்தில் இல்லை.
- ✶ நீலக் கார் பச்சைக் காரிலிருந்து இரண்டாவது தரிப்பிடத்தில் நிற்கிறது.
- ✶ பச்சைக் கார் கறுப்புக் காரிலிருந்து மூன்றாவது தரிப்பிடத்தில் நிற்கிறது.
- ✶ வெள்ளைக் கார் சிவப்புக் காருக்கு அருகில் உள்ளது.
- ✶ மஞ்சள் கார் சிவப்புக் காரிலிருந்து மூன்றாவது தரிப்பிடத்தில் நிற்கிறது.

27) வெள்ளைக் கார் எந்த நிறக் கார்களுக்கு இடையில் உள்ளது?
(1) பச்சை, சிவப்பு (2) மஞ்சள், நீலம் (3) சிவப்பு, கறுப்பு
(4) நீலம், பச்சை (5) சிவப்பு, நீலம்

28) இரண்டு முடிவிலும் உள்ள கார்களுக்கு அருகிலுள்ள கார்களின் நிறங்கள் யாவை?
(1) நீலம், வெள்ளை (2) மஞ்சள், வெள்ளை (3) நீலம், சிவப்பு
(4) மஞ்சள், சிவப்பு (5) பச்சை, சிவப்பு

29) பச்சைக் காருக்கு அதிக தொலைவிலுள்ள காரின் நிறம் யாது?
(1) வெள்ளை (2) மஞ்சள் (3) கறுப்பு
(4) நீலம் (5) சிவப்பு

➢ **30 தொடக்கம் 32 வரையுள்ள வினாக்கள் பின்வரும் அடையாளங்களை (symbols) அடிப்படையாகக் கொண்டவை.**

$\times$ = மிகப்பெரியது
$\Delta$ = சிறியதல்ல
$\div$ = சமனானதல்ல
$\emptyset$ = சமனானது
$+$ = பெரியதல்ல
$\square$ = குறைந்ததல்ல

30) $x$ ஆனது $y$ இலும் பார்க்கக் குறைந்ததல்ல, ஆனால் $z$ இற்குச் சமனானதல்ல. இது குறிப்பது
(1) $x \Delta y + z$ (2) $x \emptyset y \div z$ (3) $x \square y \div z$
(4) $x \div y \times z$ (5) $x \emptyset y + z$

31) $x$ ஆனது $y$ இற்குச் சமனானது, ஆனால் $z$ இற்குச் சமனானதல்ல. இது குறிப்பது
(1) $x \square y + z$ (2) $x \Delta y \div z$ (3) $x \div y \emptyset z$
(4) $x \div y \times z$ (5) $x \emptyset y \div z$

32) $x$ ஆனது $y$ இலும் குறைந்ததல்ல, ஆனால் $z$ இற்குச் சமனானது. இது குறிப்பது
(1) $x \square y + z$ (2) $x \emptyset y \div z$ (3) $x \Delta y \div z$
(4) $x \div y \Delta z$ (5) $x + y \square z$

➢ **33 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.**

**தக்க உணவு வழங்கப்பட்ட குரங்குகளும் பசியால் வாடிய குரங்குகளும் ஒரு மைதானத்தில் ஓட விடப்பட்டன. பட்டினிக் குரங்குகளால் வேகமாக ஓட முடியாமை அவதானிக்கப்பட்டது. வறிய நாடுகளில் வாழ்கின்ற மக்களின் குறைந்த அறிவுக்கு ஊட்டமான உணவு இன்மையே காரணமாகுமென்பதை இது நிரூபித்தது.**

33) மேற்படி பந்தியிலிருந்து பெறப்படும் அனுமானங்கள் எவை?

X - ஊட்டமான உணவு கிடைப்பின் குரங்குகளும் மனிதரைப் போல அறிவுடையனவாகும்.

Y - ஊட்டம் குறைந்த உணவு குரங்குகளினதும் மனிதரினதும் அறிவு மட்டத்தை நிர்ணயிக்கும்.

Z - பிடிபட்ட குரங்குகள் காட்டுக் குரங்குகளிலும் புத்திசாலியானவை.

(1) X மட்டும் (2) Y மட்டும் (3) Z மட்டும்

(4) Y உம் Z உம் (5) X உம் Y உம்

34) பந்தியின் எடுபொருளுக்குரிய வாதத்தைப் பலவீனப்படுத்தும் கூற்று எது?


(1) காட்டுக் குரங்குகள் தகுந்த உணவைப் பெறுவதில்லை.
(2) குரங்குகளுக்கு ஞாபக சக்தி குறைவு.
(3) அறிவுடைய மனிதர்கள் ஒருவரிலிருந்து ஒருவர் வேறுபடுவர்.
(4) வறிய நாடுகளில் சுகாதாரம் நன்கு பேணப்படவில்லை.
(5) கல்வி வசதிகள் வறிய நாடுகளில் அரிதாகவுள்ளன.


35) மேற்படி பந்தியின் குறிக்கோளை வலுப்படுத்தும் கூற்று எது?

(1) குரங்குகள் உணவில்லாமல் செல்லக் கூடியன.
(2) செல்வந்த நாடுகளிலும் ஊட்டம் குறைந்த மக்களுளர்.
(3) உணவுற்பத்தியை அதிகரித்துக் கொண்ட நாடுகள் அறிவு மட்டத்தையும் உயர்த்திக் கொண்டுள்ளன.
(4) வறிய நாட்டு மக்களில் பலர் போதிய உணவு பெறுவதில்லை.
(5) அறிவு பற்றிய அளவீடுகளை இன்று சரிவரச் செய்ய முடியும்.


➢ ***36 தொடக்கம் 39 வரையுள்ள வினாக்கள் பின்வரும் வரைபுகளை அடிப்படையாய்க் கொண்டவை.***

**XYZ கம்பனியின் 1991 - 1998 வரையான விற்பனையும் வருமானமும்**




**XYZ கம்பனியின் 1998 இல் விற்பனை வகுதிகள்**



36) 1991 - 1998 காலத்தின்போது XYZ கம்பனியின் விற்பனைகளின் சராசரி பில்லியன் டொலர்களில் யாது?

(1) 5.5 (2) 6.0 (3) 7.0 (4) 8.0 (5) 8.5

37) முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது வருமானத்தில் மிகவும் கூடிய அதிகரிப்பு சதவீதம் கொண்டது எந்த ஆண்டிலாகும்?

(1) 1992 (2) 1993 (3) 1994 (4) 1995 (5) 1996

38) பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?

I - 1998 இல் பெரிய சாதனங்களின் விற்பனை 1991 இல் மொத்த விற்பனையை விட அதிகரித்துள்ளது.

II - அதிக வருமானத்தை உடைய ஆண்டில் உள்ள வருமானம் குறைந்த விற்பனை உடைய ஆண்டில் உள்ள விற்பனையை விட அதிகமாகும்.

III - 1998 இல் பெரிய சாதனங்களின் விற்பனை 10% குறைவாகவும் கணனிகளின் விற்பனை 10% கூடுதலாகவும் இருந்திருந்தால், பெரிய சாதனங்களின் விற்பனை கணனிகளின் விற்பனையை விட குறைவாக இருந்திருக்கும்.

(1) I மாத்திரம் (2) III மாத்திரம் (3) I, II மாத்திரம்

(4) I, III மாத்திரம் (5) I, II, III ஆகியன

39) 1993 இல் வருமானத்திற்கும் விற்பனைக்குமிடையிலான விகிதம் யாது?

(1) $\frac{1}{40}$ (2) $\frac{1}{25}$ (3) $\frac{1}{4}$ (4) $\frac{25}{1}$ (5) $\frac{40}{1}$

➢ **40 தொடக்கம் 42 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டுள்ள ஒரு சோடிச் சொற்கள் தரப்பட்டுள்ளன. அதே போன்ற ஒரு தொடர்பைச் சிறந்த முறையில் வெளிப்படுத்தும் சோடியைத் தெரிவுசெய்க.**

40) **படை : போர்வீரன்**

(1) ஆறு : சமுத்திரம் (2) அமைச்சு : திணைக்களம்

(3) மழை : மழைத்துளி (4) நாடு : நகரம்

(5) கனவு : மனிதர்

41) **பசு : பால்**

(1) குழந்தை : புட்டி (2) ஆடு : இறைச்சி (3) பிச்சைக்காரன் : தர்மம்

(4) மெத்தை : கட்டில் (5) வாத்து : முட்டை

42) **சிற்பி : சிலை**

(1) ஆசிரியர் : மாணவர் (2) கமக்காரன் : செடி (3) எழுத்தாளன் : புத்தகம்

(4) தச்சன் : மேசை (5) வேலை : ஊதியம்

➢ **43 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்களில் ஒரு பிரச்சினையும் X, Y என்னும் இரு கூற்றுகளும் தரப்பட்டுள்ளன.**

**பின்வரும் அறிவுறுத்தல்களுக்கமைய உமது விடையைத் தெரிவுசெய்க.**

- ✶ தீர்வைக் காண்பதற்குக் கூற்று X மாத்திரம் போதியதெனின், A யைத் தெரிவுசெய்க.
- ✶ தீர்வைக் காண்பதற்கு X, Y ஆகிய இரு கூற்றுகளும் தேவையெனின், B யைத் தெரிவுசெய்க.
- ✶ தீர்வைக் காண்பதற்கு X அல்லது கூற்று Y போதியதெனின், C யைத் தெரிவுசெய்க.
- ✶ தீர்வைக் காண்பதற்கு கூற்று X மாத்திரம் பயன்படுத்தியும் கூற்று Y மாத்திரம் பயன்படுத்தியும் முடியுமாயின், D யைத் தெரிவுசெய்க.
- ✶ தீர்வைக் காண்பதற்கு கூற்று X ஐயும் கூற்று Y ஐயும் ஒன்றாகப் பயன்படுத்தி முடியாவிட்டால், E யைத் தெரிவுசெய்க.

43) க.பொ.த (உ/த) பரீட்சையில் பொருளியல், புவியியல் ஆகிய பாடங்களுக்கு ஒரு வகுப்பிலிருந்து 70 மாணவர்கள் விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். இவர்களுள் எத்தனை பேர் புவியியலுக்கு அன்றிப் பொருளியலுக்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்கள்?

X - 20 மாணவர்கள் புவியியல், பொருளியல் ஆகிய இரு பாடங்களையும் எடுக்கிறார்கள்.

Y - புவியியலை அன்றிப் பொருளியலை எடுக்கும் மாணவர்களின் எண்ணிக்கை பொருளியலை அன்றிப் புவியியலை எடுக்கும் மாணவர்களின் எண்ணிக்கைக்குச் சமனாகும்.

(1) A (2) B (3) C

(4) D (5) E

44) விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களின் சதவீதம் யாது?

X - விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 234 ஆகும்.

Y - பங்குபற்றியவர்களுக்கும் பங்குபற்றாதவர்களுக்குமிடையிலான விகிதம் 1 : 8 ஆகும்.

(1) A (2) B (3) C

(4) D (5) E

45) 2015 சனவரி மாதத்தில் ஒரு பவுண் தங்கத்தின் விலை யாது?


X - 2005 சனவரி மாதத்தில் ஒரு பவுண் தங்கத்தின் விலை 45000 ரூபாவாக இருந்தது.

Y - கடந்த 10 ஆண்டு காலத்தில் ஒரு பவுண் தங்கத்தின் விலை ஒவ்வோராண்டும் 1% ஆல் அதிகரித்துள்ளது.

(1) A (2) B (3) C

(4) D (5) E

➢ **46 தொடக்கம் 48 வரையுள்ள வினாக்கள் ஒரு குறித்த அமைப்புப் பொறிநுட்பத்தை அடிப்படையாய்க் கொண்டவை. இதனூடாக அனுப்பப்படும் எழுத்துக் கூட்டம் உரிய பாதையில் முன்னோக்கிச் சென்று அமைப்பிற்கு உட்பட்டு வேறோர் எழுத்துக் கூட்டம் வெளியேறுகின்றது. வினாவில் உள்ள எழுத்துக் கூட்டம் இவ்வாறு செல்லும்போது வெளியேறும் எழுத்துக் கூட்டத்தைத் தெரிவுசெய்க.**




46) I J K L → [+] → [Δ] → [×] →

(1) I J (2) J K (3) K L

(4) I K (5) J L

47) U V W X → [O] → [×] → [−] → [Δ] →

(1) U X V X (2) U X X V (3) U V X X


(4) X U V X (5) X X U V

48) RST → [ − ] → [ O ] → [ + ] → [ × ] →

(1) R S (2) S T (3) R T
(4) T R (5) T S

➢ **49 தொடக்கம் 51 வரையுள்ள வினாக்களுக்கு குறிப்பிட்ட தொடர்களை அவதானித்து, ? ஆல் காட்டப்படும் பெறுமானத்தைத் தெரிந்தெடுக்க.**

49)




(1) 16 (2) 22 (3) 28
(4) 32 (5) 36

50)


| | | |
|---|---|---|
| 2 | 4 | 25 |
| 1 | 4 | 22 |

| | | |
|---|---|---|
| 3 | 2 | 19 |
| 1 | 5 | 31 |

| | | |
|---|---|---|
| 4 | 4 | 37 |
| 1 | 3 | ? |

(1) 8 (2) 15 (3) 22
(4) 31 (5) 44


51)




(1) 5 (2) 9 (3) 11
(4) 17 (5) 19


➢ **52, 53 ஆகிய ஒவ்வொரு வினாவிலும் ஆறு உருக்கள் வீதம் தொடராகத் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு தொடர் மாறி உள்ளன. அவை ஒன்றோடொன்று மாற்றீடு செய்யப்பட வேண்டும். அவ்வாறு மாற்றப்பட வேண்டிய இரு உருக்களையும் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்துக்களை உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.**

52)




(1) A, B (2) B, C (3) C, D
(4) D, E (5) E, F

53)




(1) B, C (2) D, E (3) E, F
(4) C, F (5) A, D

54) மாசுபட்ட நிலை எப்பொழுதும் கட்புலனுக்குத் தெரிவதில்லை. ஓர் ஆறு அல்லது ஏரி மாசுபட்டிருக்கும் வேளையிலேயே தூய்மையுடையதாகக் காட்சியளிக்கலாம். குறிப்பாக நிலத்தடி நீரில் அது மாசுபட்டுள்ளமையைக் கண்டுகொள்தலும் தூய்மைப்படுத்தலும் சிரமமாகும். மாசாக்கலின் விளைவுகள் கூட உடனடியாகத் தெரிவதில்லை. அவை வெளித்தோற்ற ஆண்டுகள் பல செல்லக் கூடும். மாசுபடல் நிலை மீன்பிடித் தொழில், விவசாயம், பருகுதல், கைத்தொழில், பொழுதுபோக்கு என்பவற்றுக்கு நீரைப் பொருத்தமற்றதாக்கி ஏரிகள், ஆறுகளின் அழகியற் பண்புத் தரத்தைக் குறைக்கின்றது. மேலும் கடூரமாக மாசடைந்த நீர் நீரக ஜீவிகளை அழித்து அவற்றின் இனப்பெருக்க ஆற்றலைக் குறைக்கும்பொழுது அது முடிவில் நீர்த் தொகுதியின் உற்பத்தித் திறனைக் குறைத்து, நீர் மாசாக்கலின் விளைவுகளிலிருந்து எவரும் தப்ப முடியாத அளவுக்குத் தேசத்தின் பொருளாதாரத்தைப் பாதிக்கும்.

**மேற்படி பந்தியுடன் நன்கு பொருந்தும் கூற்றைத் தெரிவுசெய்க.**

(1) நீர் மாசடைதலின் தீய விளைவுகளை உடனடியாக அறிய முடியும்.
(2) நீர் மாசடைதலின் விளைவாக ஆறுகளினதும் குளங்களினதும் அழகியற் பண்பு இல்லாது போகும்.
(3) நிலத்தடி நீர் மாசடைதலின் விளைவு எல்லோர் மீதும் ஒரே விதமாகச் செயற்படும்.
(4) நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்திருப்பது நீண்ட பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.
(5) நிலத்தடி நீர் மாசுபட்டுள்ளமையை அரசியல் மயப்படுத்தக் கூடாது.

55) தகுதி வாய்ந்த திறமையான ஆசிரியர்களது பற்றாக்குறையானது பொதுப் பாடசாலை முறைமையைப் பொறுத்து மிகவும் பாரதூரமான பிரச்சினையாக விளங்கி வந்துள்ளது. பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்கள் ஆசிரியத் தொழிலைத் தமது வாழ்க்கைத் தொழிலாக விரும்பி ஏற்போராலேயே நிரப்பப்பட வேண்டுமேயன்றி வேறு மாற்று வேலைவாய்ப்புக்கள் கிடைக்காததால் ஆசிரியர் தொழிலை தெரிவுசெய்வோரால் அல்ல. மேலும் வேலைக்கமர்த்தப் பட்டோரும் கற்பித்தல் முறைகள், கல்வி உளவியல் என்பவற்றில் விரிவாக பயிற்றுவிக்கப்பட்டுத் திறமையான ஆசிரியர்களாக உருவாக்கப்பட வேண்டும்.

**மேற்படி பந்தியின் கருத்தைப் பிரதிபலிக்கும் கூற்றினைத் தெரிவுசெய்க.**

(1) நெடுங்காலமாக நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையின் விளைவாகத் தற்போது பாடசாலைக் கல்வி குற்றுயிராகியுள்ளது.
(2) தற்போது ஆசிரிய வாண்மைத் தொழிலுக்குப் பிரவேசித்துள்ள சிலர் மாற்றுத் தொழிலைப் பெற இயலாதவர்களாவர்.
(3) ஆசிரிய வாண்மைத் தொழிலுக்கு ஆட்சேர்க்கப்படு முன்பாகக் கற்பித்தல் முறைகளையும் கல்வி உளவியலையும் பற்றிய பயிற்சியை வழங்க வேண்டும்.
(4) ஆசிரியர் வாண்மைத் தொழிலைத் தெரிந்தெடுப்பவர்களிலிருந்து பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புதலும் அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதும் அவசியம்.
(5) கஷ்டப் பிரதேசங்களில் ஆசிரியர் சேவையாற்றுவது கட்டாயமானது.

➢ ***56, 57 ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.***

**திரு / திருமதி மணியத்திற்கு இரு பிள்ளைகள். சரோசாவும் கனகனுமாவர். கனகன் திருமதி வேலுவின் மகள் அனிதாவை மணந்துள்ளான். திரு / திருமதி வேலுவின் மகன் சதீஸ் ராணியை மணந்துள்ளான். இவர்களின் பிள்ளைகள் அரவிந்தனும் குகனுமாவர். கனகன் – அனிதாவின் பெண் பிள்ளைகள் உமாவும் சுதாவுமாவர்.**

56) குகனுக்கு உமா என்ன உறவுமுறை ஆவார்?

(1) மாமி (2) மச்சாள் (3) மனைவி

(4) சகோதரி (5) மகள்

57) கனகனுக்கு ராணி என்ன முறையாவார்?

(1) மாமி (2) மச்சாள் (3) சகோதரி

(4) மகள் (5) மனைவி

58) ஒரு வட்ட மேசையில் ஆறு பேர் அமர்ந்துள்ளனர். P யிற்கு வலது பக்கத்திலும் A யிற்கு இடது பக்கத்திலும் அமர்ந்திருக்கும் R இற்கு நேர் எதிரே S உள்ளார். A என்பவர் D யிற்கு இடது பக்கம் உள்ளார். D என்பவர் தனது இருக்கையை Y யுடனும், P என்பவர் R உடனும் மாற்றிக் கொண்டால் D யிற்கு இடது பக்கமாக இருப்பவர் யார்?

(1) Y (2) R (3) A

(4) S (5) P

- **59, 60 ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் A தொடக்கம் E வரை பெயரிடப்பட்டுள்ள ஐந்து கூற்றுகள் உள்ளன. இவற்றில் மூன்று கூற்றுகள் தருக்க ரீதியான தொடர்புடைமையைக் கொண்டுள்ளன. அம்மூன்று கூற்றுகளையும் குறிக்கும் விடையைத் தெரிவுசெய்க.**

59) A - நான் விட்ட தேவையற்ற பகடி காரணமாக அவர் என்னிடம் கோபமுற்றுள்ளார்.

B - சாந்தி குற்றமறியாத பெண்ணாவார்.

C - சாந்தி இந்நாட்களில் என்னிடம் கோபமாக இருக்கிறார்.

D - நான் விட்ட பகடி சற்றுக் கடுமையானது.

E - பொதுவாகச் சாந்தியைத் தேடிக்கொண்டு வருவார்.

(1) ABC (2) BCD (3) CDE

(4) BDE (5) CAD

60) A - சீலாவும் மாலாவும் அதிக நேரத்திற்குக் கதைத்துக் கொண்டு இருக்கின்றனர்.

B - சீலாவுக்குக் கதைப்பதில் விருப்பம்.

C - சீலாவின் ஆப்த நண்பி மாலா ஆவார்.

D - சீதாவின் அதே மாகாணத்தில் மாலா வதிகின்றார்.

E - மாலா நிதமும் சீலாவைத் தேடிக்கொண்டு வருவார்.

(1) BCA (2) CDE (3) ABC

(4) BAD (5) EAC

The National e-learning Portal for The General Education